பத்திரிகை செய்தி

தமிழகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையால் 05.06.2026 முதல் 12.06.2026 வரை மேற்கொள்ளப்பட்ட 7 பொறிவைப்பு நடவடிக்கைகள்

கடந்த 09.06.2026 அன்று திருப்பூர் மாவட்டத்தில் திரு.பி.சுப்பிரமணியன், இளநிலை பொறியாளர், மண்டலம்-3, திருப்பூர் நகர மாநகராட்சி, திருப்பூர் என்பவர் வடிகால் பணிக்கான அளவீட்டுப் பதிவேடு மற்றும் பகுதி வாரியான கட்டணப்பட்டியல் ஆகியவற்றை தயாரிப்பதற்கும் ஏற்கனவே முடிக்கப்பட்ட சாலை மற்றும் வடிகால் பணிகளுக்காகவும் ரூ.5,00,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார். குற்ற அலுவலர் வீட்டு சோதனையின்போது கணக்கில் வராத ரொக்கம் ரூ.7,75,000/- மற்றும் குற்ற அலுவலரிடமிருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.25,000/- ஆக மொத்தம் ரூ.13,00,000/- கைப்பற்றப்பட்டது.

கடந்த 09.06.2026 அன்று தூத்துக்குடி மாவட்டத்தில் பட்டா பெயர் மாற்றம் செய்ய திரு.சரவணன், கிராம நிர்வாக அலுவலர், கீழ திருச்செந்தூர் அவர்கள் ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

கடந்த 10.06.2026 அன்று தேனி மாவட்டத்தில் பட்டா பெயர் மாற்றம் செய்ய திரு.கார்த்திக் கிராம நிர்வாக அலுவலர், தேனி, அவர்கள் ரூ.5,000/. லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

கடந்த 11.06.2026 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் 215 மூட்டை நெல்லுக்கான கட்டணப் பட்டியலைத் தயாரித்து மண்டல மேலாளர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்காக ரூ.10,750/- லஞ்சம் கேட்டு பெற்றபோது திரு.சௌந்தர், கட்டணப் பட்டியல் வசூலிப்பாளர் கைது செய்யப்பட்டார். 41 கிலோ எடையுள்ள ஒரு நெல் மூட்டைக்கு ரூ.50 வீதம் லஞ்சம் பெற்றுள்ளார்.

கடந்த 11.06.2026 அன்று திண்டுக்கல் மாவட்த்தில் பட்டா பெயர் மாற்றம் செய்ய திரு.முகமது இப்ராகிம், பிர்கா சர்வேயர், திண்டுக்கல் அவர்கள் ரூ.5,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

கடந்த 11.06.2026 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில், பட்டா பெயர் மாற்றம் செய்ய திருமதி.மீனாம்பிகை, பிர்கா சர்வேயர், திண்டுக்கல் அவர்கள் ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

12.06.2026 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில், லாரிக்கு தகுதிச் சான்றிதழ் (FC) புதுப்பித்து தர திரு.சண்முக ஆனந்த், மோட்டர் வாகன ஆய்வாளர் கிரேடு-1, மற்றும் தனிநபர் திண்டுக்கல் மாவட்டம், ரூ.5,800/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டனர்.

ஊழல் வழக்குகளில் 05.06.2026 முதல் 12.06.2026 வரை நீதிமன்றத்தால் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் விபரம்

கடலூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் லஞ்ச (கையூட்டு) வழக்கில் சர்வேயர் திரு.அண்ணாதுரை மற்றும் கிராம உதவியாளர் கண்ணன், விருத்தாசலம் தாலுகா அலுவலகம், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் மொத்தம் ரூ.10,000/- அபராதமும் விதித்து 05.06.2026 அன்று தீர்ப்பளித்தது.

கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் லஞ்ச (கையூட்டு) வழக்கில் ஊரக நல அலுவலர் திரு.இந்திராணி, மாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் மொத்தம் ரூ.4,000/- அபராதமும் விதித்து 09.06.2026 அன்று தீர்ப்பளித்தது.
